[2010 ஏப்ரல் 6

திரு. கே. முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்-சாயல்குடி மாநில நெடுஞ்சாலை எண் 29-ல் கடந்த நிதி ஆண்டில் முதுகுளத்தூர் புறவழிச் சாலை அமைக்க அறிவிக்கப்பட்டு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பணி இன்னும் தொடங்கப்படவில்லை. எனவே, முதுகுளத்தூர் புறவழிச் சாலைப் பணி எப்பொழுது தொடங்கப்பட்டு, எப்பொழுது முடிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே முதுகுளத்தூருக்குப் புறவழிச் சாலை வேண்டுமென்று கடந்த ஆண்டே பலமுறை வலியுறுத்தினார்கள். ஏறத்தாழ 10, 15 சாலைகள் புறவழிச் சாலைகளாக அமைப்பதற்கு எடுக்கப்பட்ட திட்டத்தில் முதுகுளத்தூருக்கான புறவழிச் சாலையும் ஒன்று. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியும் கிடைக்கப்பெற்று, இந்த நிதி ஆண்டிலேயே அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

சமுதாயக் கூடம்

***49611—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக்கலூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 6]

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக்கலூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள், குறிப்பாக சிறிய வீடுகளிலும், குடிசைகளிலும் வாழும் ஏழையெளிய மக்கள், அவர்கள் தங்களுடைய குடும்ப நிகழ்ச்சிகளை நடத்துவதற்குப் போதிய இட வசதியில்லாத காரணத்தினாலும், மேலும் அவர்கள் வாடகைக்குக் கட்டடங்களை எடுத்து நடத்துவதற்குப் போதிய பொருளாதார வசதியில்லாத காரணத்தினாலும், தங்களுடைய குடும்ப விழாக்களை நடத்துவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், மழைக் காலங்களில் ஆதி திராவிடர்கள் வசிக்கும் தெருக்கள் சேறும் சகதியுமாகவும், சுகாதாரமற்ற சூழ்நிலையிலும் காணப்படுகின்றன. எனவே, ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கும் வடக்கலூர், ஒகளூர், பெருமத்தூர் மற்றும் அத்தியூர் போன்ற பகுதிகளில் ஆதி திராவிடர் துறைமூலம் செயல்படுத்தப்படும் தாட்கோ திட்டத்தின்மூலம் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், 249 ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக ரூ.110 கோடியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 205 சமுதாயக் கூடங்கள் ரூ.37 கோடியே 72 இலட்சத்தில் கட்டத் தொடங்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில்கூட நபார்டு வங்கிக்

கடன் உதவித் திட்டத்தின்கீழ், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஒருங்கிணைந்த மாவட்டங்களாக இருந்தபோது ஏழு கிராமங்களுக்கு அடிப்படை வசதி மற்றும் பல்நோக்கு மையம் அமைப்பதற்கு ரூ.5,26,46,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது பிரிக்கப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட கீழப்புலியூர், பெரம்பலூர் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களுக்கு அடிப்படை வசதி மற்றும் பல்நோக்கு மையம் அமைப்பதற்கு ரூ.67,62,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வடக்கலூர் பகுதியில் சமுதாயக் கூடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சமுதாயக் கூடங்கள் குறித்து, பல்வேறு மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்று அவை நிலுவையில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்பெற்ற நிதியைக் கொண்டு ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, இட வசதி, தேவையின் முக்கியத்துவம், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை ஆய்வு செய்து முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதிக்குட்பட்ட முருக்கங்குடி, நன்னை, ஓலைப்பாடி, சின்னப்பரவாய் போன்ற கிராமங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டு, தாட்கோ திட்டத்தின்மூலம் சிறு தொழில்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வந்தன. தற்சமயம் அந்தத் தொழில்கள் செயல்படாமல் கட்டடங்கள் பூட்டப்பட்டும், சற்று சிதைவுற்றும் காணப்படுகின்றன. எனவே, அரசினுடைய நிதியின்மூலமோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமோ சீர்செய்து அந்தக் கட்டடங்களை எல்லாம் சமுதாயக் கூடங்களாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? மேலும், அதே நேரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் எத்தனை

2010 ஏப்ரல் 6]

சமுதாயக் கூடங்கள் தாட்கோ திட்டத்தின்மூலம் கட்டப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கட்டடங்களையெல்லாம் சமுதாயக் கூடங்களாக மாற்றித் தர வேண்டுமென்று இங்கே எடுத்துரைத்தார்கள். அதுகுறித்து அவர்கள் மனுவாகக் கொடுத்தால், பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுள்ள கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரைக்கும் 31 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் இவை மட்டுமல்லாமல், நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக, தலைவர் கலைஞர் அரசில் ஒவ்வொரு சமுதாயக் கூடமும், ரூ.18.40 இலட்சம் செலவில் மேலும் 205 சமுதாயக் கூடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கடந்த ஆட்சியில் ஆதி திராவிட மக்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறைமூலம் கொடுக்கப்பட்ட சமுதாயக் கூடங்கள் 14. எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியில் கொடுக்கப்பட்ட சமுதாயக் கூடங்கள் 31 என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

முற்பகல் 10-45

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு சமுதாயக் கூடம்--திருமண மண்டபம்--கட்டிக் கொடுக்கின்ற எண்ணம் தமிழக அரசுக்கு இருக்கிறதா என்பதையும், ஏழையெளிய மக்கள் திருமணம் செய்துகொள்வதற்கு நிறைய செலவு செய்து திருமண மண்டபங்களைப் பிடிக்க வேண்டியிருக்கிறது. அதனாலே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஊராட்சிகளுக்கு, ஒரு ஊராட்சிக்கு ஒரு திருமண மண்டபம் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் சுமார்

350 கோடி ரூபாய்தான் செலவாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய அனுமதியைப் பெற்று நீங்கள் ஒவ்வொரு ஊராட்சிக்கும் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு திருமண மண்டபம் கட்டிக் கொடுப்பீர்களேயானால், எப்படி நீங்கள் இலவசமாக குடிசைகளை மாற்றி கான்க்ரிட் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றீர்களோ, அதே புகழ் உங்களுக்கு வந்துசேரும். அதை நீங்கள் செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு விடையிருக்கிறது. ஏற்கெனவே சமுதாயக் கூடம் இல்லாத ஒவ்வொரு ஊராட்சியிலும் சமுதாய நலக் கூடங்கள் கட்டப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, எங்கெங்கு அது தேவைப்படுகிறதோ, அந்த இடங்களில் நிச்சயமாகக் கட்டித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

20—

தொழிற்பேட்டை

***71431—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS